### உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 2018

| | |
|---|---|
| அரசியல் கட்சி 1 | |
| அரசியல் கட்சி 2 | |
| அரசியல் கட்சி 3 | |
| சுயேட்சை குழு 1 | |
| சுயேட்சை குழு 2 | |

இது வாக்காளர்களை அறிவுறுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட மாதிரி வாக்குப் பத்திரமாகும். இதனை உத்தியோகபூர்வ வாக்குப் பத்திரமாக கருதுதல் கூடாது.

## ஜனநாயக விதி:

“ஒவ்வொரு நபருக்கும் நேரடியாக அல்லது சுதந்திரமாக பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலமாக அவருடைய நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்வதற்கான உரிமை உண்டு”

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 21 (1)

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) செய்தி

ஆக்கம்:- **மஞ்சுள கஜநாயக்க**

படங்கள் இணையத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

**CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE**
**මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය**
**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்**

# வாக்குடன் ஆரம்பியுங்கள்

## எவ்வாறு வாக்களிப்பது:

1. நீங்கள் ஒரு வாக்கினை மட்டுமே அளிக்க இயலும்
2. குறிப்பிட்ட கட்சி அல்லது சுயேட்சை குழுவின் பெயர் அல்லது சின்னத்தின் முன்பாக இடப்பட்டிருக்கும் கட்டத்தினுள் புள்ளடியொன்றினை இடுவதன் மூலமாக உங்களுடையத் தெரிவினை அடையாளப்படுத்தலாம். இத்தேர்தல்களில் விருப்பு வாக்குகளை அளிக்க வேண்டிய அவசியமில்லை.
3. வாக்குப் பத்திரத்தில் வேட்பாளர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்காது. இப்பெயர்கள் வாக்களிப்பு நிலையத்தினுள் நன்கு தெரியக்கூடிய முறையில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும்.
4. வாக்குப் பத்திரத்தில் வரையப்பட்டுள்ள குறிப்பிட்ட கட்டம் முழுமையாக பூரணப்படுத்தப்படக்கூடிய முறையில் உங்கள் புள்ளடியினை இடவும்.
5. இடப்பட்டுள்ள கட்டத்தினைப் பூரணப்படுத்தாத புள்ளடியின் மூலமாக அளிக்கப்படுகின்ற வாக்குகள் மற்றும் கட்டத்திற்கு வெளியே இடப்படுகின்ற புள்ளடிகள் மூலமாக அளிக்கப்படுகின்ற வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகக் கருதப்படும்.



VOTE

# வாக்கு உங்களுடைய அதிகாரமாகும்



## சிறிய அரசாங்கம் :

இலங்கையிலுள்ள எமக்கு உள்ளூர் அதிகார சபைகள் என்பது அந்நியமான ஒரு விடயமல்ல. நாட்டில் எவ்விதமான நிர்வாக அல்லது அரசியல் கட்டமைப்பு நிலைத்திருந்த போதிலும் எமக்கு மிகவும் நெருக்கமான அரசாங்க அலகாக அமைவது உள்ளூர் அதிகார சபைகளே ஆகும். தற்போது வரையில் 341 உள்ளூர் அதிகார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் உள்ளூர் அரசாங்கத் தேர்தல்கள் எனவும் கூறப்படும்.

நூற்றாண்டு காலமாக பரிணாமமடைந்து வந்த உள்ளூர் அதிகார சபைகளின் கட்டமைப்பானது தற்போது கீழ்வருமாறு காணப்படுகின்றது.

| | |
|---|---|
| 24 | மாநகர சபைகள் |
| 41 | நகர சபைகள் |
| 276 | பிரதேச சபைகள் |

“தேர்தல்களே ஜனநாயகத்தின் மகோற்சவம்” எனப்படும். உங்களுடைய கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரத்தினை பரிசீலித்துப் பார்க்கின்ற ஒரு விலைமதிப்பற்ற சந்தர்ப்பம் வாக்களிக்கின்ற சந்தர்ப்பமே ஆகும். வாக்குரிமை என்பது உங்களை பிரஜையாக அடையாளப்படுத்துகின்ற வெறும் ஆபரணமொன்றல்ல.




அது உங்களுடைய குரலாகும்.

வாக்களிப்பதனை தவிர்த்து உங்களுடைய சம்மதத்தை தெரிவிப்பதற்கு நீங்கள் மறுக்கும் போது அதன் பிரதிவிளைவாக தகுதியற்ற நபர்கள் பதவிக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். இதனால்தான் புகழ்பெற்ற சிவில் உரிமைகள் செயற்பாட்டாளரான லின்டா சாவேஸ் என்பவர் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

**"தலைவரொருவரைத் தெரிவு செய்வதற்கு ஒருவர் காட்டுகின்ற ஆர்வமானது, தெரிவினை மேற்கொள்கின்ற அந்நபரின் உள்ளார்ந்த பெறுமதியினை உறுதிப்படுத்தும்"**

## புதிய தேர்தல் முறையின் சாட்சியாளராகுங்கள்

இம்முறை எமக்காக புதிய தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 10 ஆம் திகதி காலை வேளையில் உங்களுடைய வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதன் மூலமாக புதிய முறையில் நடைபெற இருக்கின்ற இத்தேர்தலுக்கு நீங்களும் ஒரு சாட்சியாளராக ஆகலாம். இலங்கை பிரஜைகள், விருப்புரிமை வாக்கு முறையினை அலட்சியப்படுத்தி, கிராமம் அல்லது நகரத்துக்கு பொறுப்பு கூறக்கூடிய பிரதிநிதிகளே வேண்டுமென நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வந்தனர். பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் இலங்கையிலுள்ள மிகச் சிறிய அரசியல் அலகாக வட்டாரமே காணப்படும். இவ் வட்டாரமானது தொகுதிகளை (ஒரு உறுப்பினர் தொகுதி அல்லது பல உறுப்பினர் தொகுதி) உள்ளடக்கியிருக்கும். எவ்வாறெனினும் வட்டாரமே மிகச்சிறிய அரசியல் அலகாகக் கருதப்படும். மேலும் கிராம அலுவலர் பிரிவே மிகச் சிறிய நிர்வாக அலகாகக் கருதப்படும். எத்தகைய அரசியல் அல்லது நிர்வாக சவால்கள் நிலைத்திருந்த போதிலும், கிராமத்தை அல்லது நகரத்தைப் பெருமைப்படுத்தக்கூடிய மற்றும் தூய அரசியலில் ஈடுபடக்கூடிய ஆற்றல் மிகுந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதே எமது ஒரே முயற்சியாக அமைய வேண்டும்.

**உங்கள் சார்பாக உங்களுடைய அயலவர் செயற்படுவார் என்று காத்திருக்காது, உங்களுடையத் தெரிவினைச் செய்வதற்காக நீங்களே முன்வரவேண்டியது உங்களுடைய பொறுப்பாகும்.**

வாக்கு என்பது நீங்கள் சுதந்திரமாகக் கருத்து தெரிவிப்பதற்கான உங்களுடைய ஒரு உரிமையே தவிர வேறொன்றுமல்ல. அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது பிரஜைகள் என்ற ரீதியில் உங்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும்.

புகழ்பெற்ற அரசியற் புள்ளியான வின்சன் சர்ச்சில் என்பவர் சிறிய மனிதனின் சிறிய புள்ளடி பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்.

"ஜனநாயகத்திற்கு செலுத்தப்படுகின்ற அனைத்து காணிக்கைகளினதும் அடிப்படை ஒரு சிறிய மனிதன், சிறியதொரு வாக்குச்சாவடிக்குச் சென்று, சிறியதொரு பென்சிலினால், சிறிய காகிதமொன்றிலே இடுகின்ற சிறியதொரு புள்ளடியே ஆகும். எவ்வளவு பெரிய கலந்துரையாடல்களினாலும் அல்லது சொற்பொழிவுகளினாலும் இச்சிறிய புள்ளடிக்கு காணப்படுகின்ற முக்கியத்துவத்தினை குறைத்து விட முடியாது"

## அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளியுங்கள்:

இலங்கையில் உதயமாகியிருக்கும் புதிய தேர்தல் முறையின் பயன்மிகு முதலீடொன்றாக அமைவது, அரசியலில் பெண்களுடைய பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தி பெண்களுக்காக வழங்கப்பட்டிருக்கும் 25% ஒதுக்கீடு ஆகும். இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் வாக்காளர்களில் 52% பெரும்பான்மையான வாக்காளர்கள் பெண்களே ஆவர். சமூக மற்றும் அரசியல் அனுபவங்களையுடைய மற்றும் குறிப்பிட்டளவான விழிப்புணர்வுடைய பொருத்தமான பெண்களை அரசியலில் பிரதிநிதிகளாக்குவதனை உறுதிப்படுத்துதலானது தூய அரசியற் கலாசாரத்தை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாகும்.

**ஆண்களும் பெண்களும் பரஸ்பர முறையில் தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் பகிர்ந்து செய்யும் போது எங்களுடைய சமூகக் கட்டமைப்பானது வர்ணமயமானதாக மாறும். பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த நீங்கள் செய்யும் பங்களிப்பானது பிரஜை என்ற ரீதியில் நீங்கள் மேற்கொள்ளும் சமூக முதலீடாகும். இதனை உங்களுடைய ஒரு கடமையாக எண்ணுங்கள்.**

## வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்:

ஒவ்வொரு வாக்காளரும் கீழ்வரும் அடையாள ஆவணங்களுள் ஏதேனுமொன்றை வாக்களிப்பு நிலையத்திலுள்ள அலுவலர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:

# தூய அரசியல் கலாசாரமொன்றிற்காகப் பெண்களுக்கு அதிகாரமளிப்போம்



1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை (பழைய அல்லது புதிய இலத்திரனியல் அடையாள அட்டை)
5. முதியோர் அடையாள அட்டை
6. மதகுருமார்களுக்கான அடையாள அட்டை (ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டது.)

மேற்கூறப்பட்ட எந்தவொரு ஆவணமும் இல்லாதவிடத்து தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற **தற்காலிக அடையாள அட்டையினை** தாமதமின்றிப் பெற்றுக் கொள்ள இயலும்.